கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.
முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

2025ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 01ம் தேதி வெள்ளிக்கிழமை
இடைநிலை மனு எண்.5/2025
இன்
அசல் வழக்கு எண்.202/2021
* * * *

உமாரமணி ... மனுதாரர்/வாதி

/ எதிர்/

1. அருள்பிரிட்டோராஜ்
2. கல்பனா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இன்று 01.08.2025ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.அண்ணா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.இரா.விஜயகோபால் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்து இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

# <u>உத்தரவு</u>

மனுதாரர்/வாதி தரப்பால் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் 151ன் கீழ் இம்மனுவானது இந்நிர் அசல் வழக்குடன் மற்றொரு அசல் வழக்கு எண்.203/2021 என்ற வழக்கினையும் இணைத்து இவ்விரு வழக்கினையும் ஒன்றிணைந்த வழக்கு விசாரணையாக (Joint Trial) எடுத்துக்கொண்டு விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1) **இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்? இம்மனுக்கள் சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதா? என்பதேயாகும்.**</u>

1.1) மனுதாரர்/வாதி தரப்பில், இந்நிர் இந்நிர் அசல் வழக்குடன் இந்நிர் மனுதாரர்/மற்றொரு அசல் வழக்கு எண்.203/2021 என்ற வழக்கினையும் இணைத்து இவ்விரு வழக்கினையும் ஒன்றிணைந்த வழக்கு விசாரணையாக (Joint Trial) எடுத்துக்கொண்டு விசாரணை செய்ய உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) இந்நிலையில், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில், மனுதாரர்/வாதியானவர் இந்நிர் அசல் வழக்கினை காலதாமதப்படுத்தவேண்டும் என்ற தீய நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இரண்டு அசல் வழக்குகளின் உண்மைகளை மறைத்தும் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்/வாதியின் இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

<u>2) தீர்வு:–</u>

இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

2.1) மனுதாரர்/வாதி தனது மனுவில், இந்நிர் அசல் வழக்கான 202/2021ஐ இந்நிர் மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ளதாகவும், இவ்வழக்குடன் தொடர்புடைய மற்றொரு அசல் வழக்கான அசல் வழக்கு எண்.203/2021ஐ இந்நிர் மனுதாரர்/வாதியின்

மாமியாரான தனலட்சுமி என்பவரும், இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இரு வழக்குகளையும் தாக்கல் செய்துள்ளதாகவும், இரண்டு வழக்குகளிலும் மனுதாரர்/வாதி தரப்பில் ஒரே சாட்சியங்களானது முன்னிலைப்படுத்தப்பட உள்ளதாலும் இரண்டு வழக்குகளையும் ஒருசேர இணைத்து விசாரணை செய்யவேண்டும் என்று குறிப்பிட்டு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2.2) ஆனால், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்களது வாதத்தின்போது, மனுதாரர்/வாதி தரப்பில் கூட்டாக விசாரணை செய்யவேண்டி குறிப்பிட்டுள்ள இரண்டு வழக்குகளின் சங்கதிகளானது வெவ்வேறு என்றும், இரண்டு வழக்குகளின் வாதியானவர் சட்டப்படி வெவ்வேறான நபர்கள் என்றும், மேலும் அசல் வழக்குகளின் சர்வே நம்பர்களும் வெவ்வேறானவை என்றும், மேலும் நீதிமன்றத்தால் இரண்டு வழக்குகளிலும் வனையப்பட்டுள்ள எழுவினாக்களும் வெவ்வேறானவை என்பதாலும் மேற்படி இரண்டு வழக்குகளையும் விசாரணையை ஒருசேர நடத்துவது சட்டப்படி ஏற்கத்தக்கததல்ல என்றும் குறிப்பிட்டு வாதம் செய்துள்ளார்கள்.

2.3) இந்நிலையில், இம்மனுவினை அனுமதிப்பது குறித்து பரிசீலிக்கையில், இரண்டு வழக்குகளின் வாதியானவர்கள் சட்டப்படி வெவ்வேறான நபர்கள் என்றும், மேலும் அசல் வழக்குகளின் சொத்து விபரங்களும் வெவ்வேறானவை என்றும், இரண்டு அசல் வழக்குகளின் சங்கதிகளும் வெவ்வேறு என்ற எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளின் வாதமானது சட்டப்படியாக ஏற்கத்தக்கத்தக்கது என்பதை கருத்தில்கொண்டும், மேலும் இரண்டு வழக்குகளின் வழக்குமூலமும், சர்வே நம்பர்களும் வெவ்வேறான நிலையில் இரண்டு வழக்குகளையும் ஒருசேர நடத்துவதால் தேவையில்லாத காலதாமதமும், குழப்பமும் ஏற்படும் என்பதை கருத்தில்கொண்டும், இந்நிர் மனுதாரர்/வாதியின் மனுவினை சட்டப்படியாக அனுமதிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** மனுதாரர்/வாதியின் இம்மனுவினை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 01.08.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2025.08.01 17:18:15 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு:-**

**இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2025.08.01 17:18:22 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.5/2025
இன்
அசல் வழக்கு எண்.202/2021
பொது வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 01.08.2025